

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கல்லாலங்குடி கிராமத்தை சேர்ந்த தசைநார் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி கோபிநாத் என்பவர் டிஎன்பிஎஸ்சி குரூப் 2ஏ தேர்வில் தேர்ச்சி பெற்று கூட்டுறவுத் துறையில் முதுநிலை ஆய்வாளர் பணியினை பெற்று சாதனை படைத்ததை தொடர்ந்து பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 21.08.2025 அன்று அவரை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்து, பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலியினை வழங்கினார். உடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.ப.புவனா மற்றும் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கேவணி இல்லம், சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.3.07 கோடி மதிப்பீட்டிலான திட்டப்பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன் முன்னிலையில் தொடங்கி வைத்தார்கள்.

### நெல்லை மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

# 29,434 மனுக்கள் பெறப்பட்டு 12,523 மனுக்களுக்கு தீர்வு!

## நலத்திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் கே.என்.நேரு தகவல்!

நெல்லை, ஆக.25-

**''நெல்லை மாவட்டத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் மூலம் 29,434 மனுக்கள் பெறப்பட்டு அதில் 12,523 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.**

நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் வருவாய்த்துறை செயலாளரிடம் தமிழ்நாட்டில் தகுதியான ஏழை, எளிய,மக்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டதன் அடிப்படையில்,நகர்புறங்களில் நீண்ட நாட்கள் குடியிருப்பவர்களுக்கும், இரண்டு சென்ட் பட்டா வழங்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி ரூபாய் 5.00 லட்சத்திற்கும் குறைவான மதிப்பு உள்ள நிலங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அனுமதி பெற்று பட்டா வழங்கலாம். ரூபாய் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மனைகளுக்கு சென்னையில் உள்ள வருவாய்த்துறை செயலாளரிடம் அனுமதி பெற்று பட்டா வழங்கப்படும்.மேலும், கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு வருவாய்த்துறை, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வாயிலாக பட்டா வழங்கவும் அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு,தமிழ்நாடு முழுவதும் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருவதோடு,ஏற்கனவே பெறப்பட்ட பட்டாக்களுக்கு இபட்டா வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 1.16 கோடி நபர்களு க்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.42 இலட்சம் முதியவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.5 இலட்சம் மாணவர் களுக்கும் மற்றும் 9 இலட்சம் மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 2.26 கோடி குடும்ப அட்டைதாரர்களின் ஒரு குடும்



பத்திற்கு ஒரு நலத்திட்ட உதவி கிடைக்கும் வகையில் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை விடுப்பட்ட மகளிர்களுக்கு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பெறப்பட்டு வருகிறது.பெறப்பட்ட மனுக்களை ஆராய்ந்து தகுதியான மகளிர் களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கிடைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் இதுவரை 123 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. அதன் மூலம் 29434 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றில் 12523 விண்ணப்பங்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு உங்களுக்கான அரசு, உங்கள் ஆதரவு என்றும் அவருக்கு இருக்க வேண்டும்

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

முன்னதாக, பாளையங்கோட்டை பேருந்து நிலையம் அருகில் ரூ.5 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள முதல்வர் படைப்பகம் கட்டுமானப் பணிகளுக்கு சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் அடிக்கல் நாட்டினார்கள்.

முதல்வர் படைப்பகம் கட்டித்தினை சுற்றிலும் பள்ளி மற்றும் கல்லூரிகள் உள்ளதால் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ/ மாணவிகள், பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மற்றும் ஏழை, எளிய மாணவ, மாணவிகள் மற்றும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்பவர்கள் இந்த முதல்வர் படைப்பகத்திலுள்ள புத்தகங்களை படித்து பயன்பெறும் வகையில் 1600 புத்தகங்கள் வைப்பதற்கான வசதியுடன் கட்டப்படவுள்ளது.

மேலும்,மின்புத்தக அறை வசதியும் உள்ளதால் மாணவ, மாணவியர்கள் கணினி வாயிலாகவும் புத்தகங்களை படித்து பயன் பெறுவதற்கு ஏதுவாகவும்,குழுவாக அமர்ந்து கலந்துரையாடி படிப்பதற்கு ஏதுவாகவும் 4 அறைகள் ஒவ்வொன்றும் 7 இருக்கைகள் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

### துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில்

# ரூ.15.29 கோடியில் 85 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள்!

## கட்டுமானப் பணியை அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் – பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தனர்!

சென்னை, ஆக.25-

குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எல்லீஸ்புரம் திட்டப்பகுதியில் மறுகட்டுமான திட்டத்தின் கீழ் ரூ.15.29 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 85 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமான பணியினை தொடங்கி வைத்தனர்.

தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டுவசதியினை ஏற்படுத்தி தரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1974 ஆம் ஆண்டு எல்லீஸ்புரம் திட்டப் பகுதியில் 4 தொகுப்புகளாக 71 குடியிருப்புகள் தரை மற்றும் 2 தளங்களுடன் கட்டப்பட்டது.

தட்ப வெப்ப சூழ்நிலையின் கராரணமாக இக்கட்டடம் பழுதாகிவிட்டதால் இடிக்கப்பட்டு மறுகட்டுமான திட்டத்தின் கீழ் ரூ.15.29 கோடி மதிப்பீட்டில் தூண் மற்றும் 5 தளங்களுடன் 85 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட உள்ளது.

இப்புதிய குடியிருப்புகள், ஒவ்வொன்றும் தலா 410 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், தார் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி.சிங், வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திருமதி ந.ப்ரியா ரவிச்சந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி இராயபுரம் மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு, தலைமை பொறியாளர்கள் வி.எஸ். கிருஷ்ணசாமி, சு.லால் பகதூர், மேற்பார்வை பொறியாளர் இளம்பரிதி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தி.மு.க. வேரை அசைத்து பார்க்க முடியாது, தி.மு.க.வின் ஆணிவேர் ஆழமானது,

# வேர் எங்கு உள்ளது என்பதை அமித்ஷாவால் கண்டறிய முடியாது

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி

புதுக்கோட்டை. ஆக25-

புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கல்லூரியில் தனியார் வேலை வாய்ப்பு முகாம் மற்றும் ராணியார் அரசு மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் மருத்துவ பரிசோதனை செய்யும் முகாம் ஆகியவை நடைபெற்றது இதில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆட்சியர் அருணா ஆகியோர் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர்

இதன் பின்னர் செய்தியாளரிடம் பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி,

தி.மு.க. வேரை அசைத்து பார்க்க முடியாது, தி.மு.க.வின் ஆணிவேர் ஆழமா



னது, அந்த வேர் எங்கு உள்ளது என்பதை கூட அமித்ஷாவால் அதனை கண்டறியக்கூட முடியாது

ஸ்டாலினுக்கு பின்னால் உதயநிதி ஸ்டாலின் தான் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்பார்,

எந்த அமித்ஷா வந்தாலும் இதனை தடுக்க முடியாது, ஏற்கனவே முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கட்டம் சரியில்லை என்று சொன்னார்கள், ஆனால் அதை தவிடுப்பொடியாக்கி அவர் முதலமைச்சர் ஆனார் அதே போல் அவருக்கு பின்னால் உதயநிதி ஸ்டாலினும் முதலமைச்சர் ஆவார்

பிரதமர் முதல் அமைச்சர்கள் வரை அனைவரும் மூன்று மாதங்கள் சிறையில் இருந்தால் தானாக பதவி பறிபோய்விடும் என்ற சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேறுவதற்கு வாய்ப்புகள் இல்லை. இருப்பினும் ஒரு வேலை நிறைவேற்றப்பட்டால் நீதிமன்றம் மூலமாக இந்த சட்டத்தை தவிடு பொடியாக்க எங்களுடைய வழக்கறிஞர்கள் தயாராக உள்ளனர்.

குஜராத்தில் அமித்ஷா உள்துறை அமைச்சராக இருந்தபோது என்ன நடந்தது என்பது குறித்து எல்லாம் அவர் சிந்தித்து பார்க்க வேண்டும்.

**நீதிமன்றத்தை நாங்கள் நம்புகிறோம் நீதிமன்றத்தின் தீர்ப்பு இறுதியானது**

இந்த சட்டம் நிலை குழுவிற்கு தான் சென்றுள்ளது. நிறைவேற்றப்பட்ட பின்னர் திமுக சார்பில் நீதிமன்றத்திற்கு செல்வதற்கு முடிவு செய்வோம்.

ஒருவேளை அவர்களை எதிர்க்கட்சியாலும் மாநிலங்களில் பயமுறுத்துவதற்காக இந்த சட்டத்தை அமல்படுத்திருக்கலாம். முதலில் சட்டம் நிறைவேற்றப் படட்டும் அதன் பின்னர் நீதிமன்றத்திற்கு செல்வது குறித்து முடிவு செய்வோம்.

**மக்களுக்கான தேவைகளை நாங்கள் நிறைவேற்றி வருகிறோம்.**

மக்கள் நலம் காக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கனவுகள் எங்களுக்கு தேர்தலை கண்டு பயம் கிடையாது மக்களுடைய நம்பிக்கை திமுக மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதுதான்.

பாஜக குறுக்கு வழியில் ஆட்சியில் இருப்பவர்களை ஏதாவது ஒரு குற்றம் சாட்டி சிறைக்கு அனுப்பி வழக்குகளை சிக்க வைத்து அதன் மூலமாக அவர்கள் பதவியை பறித்து ஆட்சிக்கு வர முடியுமா என்று பார்க்கிறார்கள். அவர்கள் பகல் கனவு காண்கிறார்கள் . நாங்கள் பகல் கனவு காணவில்லை அதற்கு அவசியமும் எங்களுக்கு இல்லை.

அமித்ஷா கூறுவதற்கெல்லாம் நாங்கள் பதில் கூற முடியாது. தமிழ்நாட்டின் நிலவரம் அமித்ஷாவுக்கு தெரியாது

அகில இந்திய முடிவு என்பது வேறு. தமிழகத்தின் முடிவு குறித்து 2026 தேர்தல் முடிவு மீண்டும் பாஜகவிற்கு ஒரு பாடம் புகட்டும். 2021 கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை எதை நிறைவேற்றவில்லை என்று அவர்கள் கூற வேண்டும். அனைத்தும் நிறைவேற்றி விட்டோம். சொல்லாததையும் செய்து விட்டோம்.

இயற்கை வளங்களில் நாங்கள் எங்கு கொள்ளையடித்துள்ளோம் என்று அவர்கள் கூற வேண்டும். அதிகாரம் மத்திய அரசு கையில் தான் உள்ளது.

தமிழகத்திலிருந்து இயற்கை வளங்கள் எந்த மாநிலங்களுக்கு செல்லவில்லை அப்படி சென்றிருந்தால் அதற்கு மத்திய அரசு தான் பொறுப்பு.

தமிழக அரசு பொறுப்பல்ல இயற்கை வளங்கள் கொள்ளை குறித்து ஏற்கனவே அமலாக்கத்துறை சோதனை நடத்தி விசாரணை நடந்து கொண்டுள்ளது. நீதிமன்றம் குற்றம் நடந்துள்ளது என்று எந்த தீர்ப்பும் தரவில்லை.

வழக்கு தொடர்ந்த உடனேயே குற்றவாளி என்று குற்றம் நடந்துள்ளது என்று கூற முடியாது. நீதி மன்றத்தில் வழக்கு விசாரணை முடிந்து தீர்ப்பு வந்த பிறகு தான் அது தெரியவரும். பல வழக்குகளில் நிரூபிக்க முடியாமல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது

எடப்பாடி முதல் முன்னாள் அமைச்சர்கள் வரை அனைவர் மீதும் வலுவான குற்றச்சாட்டுகள் மீதுதான் லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கு பதிவு செய்துள்ளது.

அமித்ஷா 2026 தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்று கூறுகிறார். ஆனால் எடப்பாடி முதல்வர் என்று அவர் கூறவில்லையே என்ற கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் எஸ்.ரகுபதி நாங்கள் தான் அவர்கள் ஆட்சிக்கே வரமாட்டார்கள் என்று கூறி வருகிறோம்

எனவே அமித்ஷா முதலமைச்சர் யார் என்பதை கூறினால் எங்களுக்கு என்ன? கூறாவிட்டால் எங்களுக்கு என்ன?

என்று பதிலளித்தார்..







திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி ஒன்றியம், கூனம்பட்டி ஊராட்சி, ஆலாம்பாளையத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் ஆய்வு செய்து பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் மூலம் தீர்வுகள் பெற ஆவண செய்தார். நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி நந்தகுமார், மாவட்ட சார்பு அணி துணை தலைவர் ஓம்சக்தி பரமசிவம், துணை அமைப்பாளர் எஸ்.கே.பழனிச்சாமி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மகேந்திரன் உள்ளிட்ட ஊத்துக்குளி ஒன்றிய கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.







திருப்பூர் மாவட்டம், பெருந்துறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குன்னத்தூரில் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தும், புதிதாக கட்டப்பட்டுள்ள வட்டார மருத்துவ அலுவலகத்தையும் காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார். அதனை தொடர்ந்து ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் . நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் கொண்டசாமி, பொதுக்குழு உறுப்பினர் கேசவன், ஊத்துக்குளி ஒன்றிய செயலாளர்கள் சுப்பிரமணியம், குன்னத்தூர் ராஜா, குன்னத்தூர் பேரூர் செயலாளர் சென்னியப்பன், பேரூராட்சி தலைவர்கள் குமாரசாமி, பழனியம்மாள் ராசுக்குட்டி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் கவுன்சிலர் தனலட்சுமி, பேரூராட்சி கவுன்சிலர்கள் வெங்கடாசலம், முருகசாமி, வெங்கடேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.